# வடமராட்சி வடக்கு

## பிரதேச கீதம்

பல்லவி

வாழ்க பல்கலை வளம் தரும் ஆலயம்
வாழ்க வளருக வாழியவே வாழியவே

அனுபல்லவி

உள நலம் தானறியும் உன்னத நிர்வாக
வள நிறை கோயில் வனப்புடன் வாழியவே

சரணம்

கடல் பனை வளமிகு துறைமுக மடியில்
கலங்கரை கோபுர உயர் முடி வீடு
வடமராட்சி வட பிரதேசம் நாளும்
உயர்வொடு செயலகம் எழும் தினம் நீடு – வாழியவே

தலமது சிறக்கவே! நலமது பெருகவே!
புலம்புகழ் பேறுயர் கல்லூரி தன்னோடு
கலை மிளிர் முத்தமிழ் வித்தகர் உருவாகும்
நிலைதனை பகரும் திருமுக பெறு பூமி – வாழியவே

அருங்கலை கவினுயர் ஆடல் பாடல்
தருமுடற் பயிற்சி தக்கதற் கலையும்
விருப்புடன் வேண்டி விளையுமே மேன்மை
இருப்பினைத் தன்னகம் ஊற்றெனத் தருமே – வாழியவே

வித்தகர் வான்புகழ் சத்தியம் தான் குறி
சித்திகள் எழுபலர் சொத்துக ளாயுளோர்
எத்தனை செழுமை எம்மனம் புகழும்
நித்தியம் வாழ்த்தும் நிதமறி வோமே – வாழியவே

ஆக்கம் : அல்வையூர் கே. ஆர். திருத்துவராஜா